

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், மக்களவை மாநிலங்களவை ஆகிய இரு அவைகளின் கழக நாடாளுமன்றத்தின் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கனிமொழி கருணாநிதி, கழக மக்களவைக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டி.ஆர். பாலு, கழக மக்களவைக் குழுத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தயாநிதி மாறன், மாநிலங்களவை கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ள மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், மக்களவை மாநிலங்களவை ஆகிய இரு அவைகளின் பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக செய்தி / தொடர்பு தலைவர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.6.2024) தலைமைச் செயலகத்தில், இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும் ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே. அமுதவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், மக்கள் விடுதலை கட்சி தலைவர் முருகவேல் ராஜன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40க்கு–40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, பொதுச் செயலாளர் கோவிந்தராஜுலு, பொருளாளர் சதகத்துல்லா ஆகியோர் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40–க்கு 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றதற்கு வாழ்த்து தெரிவித்தார்கள்.



சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ள காலம் உள்ளவரை கலைஞர் நவீன தமிழகத்தின் சிற்பிக்கு வரலாற்று சிறப்புமிக்க நவீன கண்காட்சியகத்தை கவிப்பேரரசு வைரமுத்து நேரில் சென்று பார்வையிட்டார்.









நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிட்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகளாய் மக்களின் நம்பிக்கையைப் பெற்று, மக்களவையை கொள்கை உரைகளால் வெல்லப்போகும் தங்க தமிழ்ச்செல்வன், க. செல்வம், தமிழச்சி தங்க பாண்டியன், கலாநிதி வீராசாமி ஆகியோர் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.









2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு & புதுச்சேரியில் ‘இந்தியா’ கூட்டணியின் நாற்பதுக்கு நாற்பது என்ற மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக குரலெழுப்பப் போகும் மக்களவை உறுப்பினர்கள் டி.எம். செல்வகணபதி, கே.நவாஸ் கனி, துரை வைகோ, கே.இ.பிரகாஷ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.